Registered as a New. Paper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

Y.M.CA

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 08 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 29 | (15 - 10 - 1992) | வியாழக்கிழமை | ஓசை 240

## பளைப் பிரதேசத்திற்கான காவல் பணிமனை நேற்று திறப்பு

தமிழீழ காவல்துறையின் பளைப் பிரதேசத்திற்கான காவல் பணிமனை நேற்றுக்காலை 7 மணிக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க நிதிப்பொறுப்பாளர் திரு. தமிழேந்தி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக்கொடியை நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி அவர்களும், தமிழீழக் காவல்துறைக்கொடியை காவல்துறைப்பொறுப்பாளர் திரு. நடேசனும் ஏற்றிவைத்தனர். இதைத் தொடர்ந்து மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கில் அடுத்த நடவடிக்கை என்ன?

# கூட்டுப்படைத் தலைமையகத்தில் மாநாடு

## இரு தினங்களாக மந்திராலோசனை

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் தற்போதைய பாதுகாப்பு நிலைவரம் குறித்தும், அடுத்தகட்ட இராணுவ நடவடிக்கைகள் குறித்தும் கூட்டுப்படை தலைமையகத்தில் இரு நாட்களாக மந்திராலோசனை இடம் பெற்றதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இம் மாநாட்டில் முப்படைத் தளபதிகளும் வடக்கு - கிழக்கில் கடமையாற்றும் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

முப்படைத் தளபதிகளிடம் இருந்து அதிகாரங்கள் கூட்டுப் படைத் தலைமையகத்திடம் கடந்த 10ஆம் திகதி மாற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து 11ஆம், 12ஆம் திகதிகளில்இம் மந்திராலோசனை இடம்பெற்றது. இம் மாநாட்டிற்கு கூட்டுப்படைகள் தலைமை தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தலைமை தாங்கினார்.

இம் மந்திராலோசனையின் போது வடபிராந்தியத்தில் புதிதாக மேற்கொள்ளப்பட வேண்டிய இராணுவ நடவடிக்கைகளுக்கான திட்டம் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

### உடன் தகவல் தரவும்

சென்ற வருடம் வெளியிடப்பட்ட மாவீரர் குறிப்பேட்டில் திருத்தங்கள் ஏதும் செய்ய வேண்டியிருப்பின், சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக கொக்குவிலில்இருக்கும்தமிழீழ மாவீரர் பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### எறிகணை தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் பொன்னாலை, மூளாய், சுழிபுரம், திருவடிநிலை ஆகிய பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிற்கு புதிய தளபதியாக பிரிகேடியர் அசோகாஜெயவர்த்தனா?

### விசுவாசிகளை நியமிக்க ஹமில்டன் விருப்பம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கைகள் மீண்டும் கூட்டுப் படைகளின் தலைமையின் கீழ் (ஜே. ஓ சி) கொண்டு வரப்பட்டுள்ளதைத் தொடர்ந்து வடபகுதியில் புதிய நியமனங்கள் நடைபெறும் என கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன இந் நியமனங்களில் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தனக்கு [illegible] நியமிப்பதில் அக்கறை காட்டுவதாகவும் தெரிகிறது.

தற்போது வடபிராந்திய இராணுவ தளபதியாக இருக்கும் மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா ஏற்கனவே இராணுவ தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த சில தினங்களில் அவர் கொழும்பு வந்து புதிய பதவியை பொறுப்பேற்க இருக்கிறார் என்றும் [illegible] தியாக பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தன நியமிக்கப்பட இருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இப்போது கூட்டுப்படைகளின் தலைமையகத்தில் கடமையாற்றும் கேணல் சரத் முனசிங்க வடபகுதிக்கு அனுப்பப்பட்டு இராணுவப் பிரிவொன்றுக்கு கமாண்டராக நியமிக்கப்பட இருக்கி[illegible]

பூநகரியில் கைதானோர்

## தகவல் பெறுவதற்கு அரச அதிபர் முயற்சி

வேலணைப் பகுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பூநகரி வெட்டுக்காடு என்னும் இடத்தைச் சேர்ந்த சுமார் முப்பது பொது[illegible] கதைத்து இவர்களின் பெயர் விபரங்களைப் பெறுவதற்கு முயற்சியை மேற்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கழுத்துறை மகசின் ஆகியவற்றில் தடுத்து வைக்கப்பட்[illegible]

வடபகுதி தபாலக

## அமைய ஊழியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

வடபகுதி தபாலகங்களில் 1988-89 இல் அமைய ஊழியர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு வெகுவிரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது இவ்வாறு நிரந்தரமாக்கப்படும் ஊழியர்கள் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. சாதாரண தரத்தில் சித்தியெய்தியிருக்க வேண்டும் என அரசு செய்திக் குறிப்பொன்று தகவல் வெளியிட்டுள்ளது (05)

## ஆரம்பபிரிவு ஆசிரியருக்கு சேவைக்கால பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட ஆரம்பப் பாடசாலைகளிலும், பாடசாலையின் ஆரம்பப்பிரிவுகளிலும் போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்கள் இவ்வாரத்தில் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் பதினாறாம், பதினேழாம், பதினெட்டாம்திகதிகளில் யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், இராமநாதன் கல்லூரியிலும் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஐந்து வரையான வகுப்புக்களில் போதிக்கும் ஆசிரியர்களுக்

[4 ஆம் பக்கம் பார்க்]

## யாழ். கடத்தவிருந்த பற்றிகள் பிடிபட்டதாம்

பொலிஸ் நடாத்தும் வழமையான சோதனைகளின் போது யாழ்ப்பாணத்துக்குக் கடத்துவதற்காகப் பதுக்கி வைத்திருந்ததாகக் கருதப்படும் 9,870 பென் டோர்ச் பற்றிகளைப் பொலிசார் [illegible] துடன் மூன்று பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா வழியாக இந்த பற்றிகள் யாழ்ப்பாணத்துக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

முதியவர்

பட்டவர்கள் உடன டியாக கொக்குவி லில் இருக்கும் தமிழீழ மாவீரர் பணிமனை யுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளனர்.

## எறிகணை தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நிலைகொண் டிருக்கும் சிறிலங்கா இராணு வத்தினர் பொன்னாலை, மூளாய், சுழிபுரம், திருவடி நிலை ஆகிய பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

மந்திராலோசனை இடம்பெற் றது. இம் மாநாட்டிற்கு கூட்

னார்.

இம் மந்திராலோசனையின்

கைகளுக்கான திட்டம் குறித் தும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

பூநகரியில் கைதானோர்

# தகவல் பெறுவதற்கு அரச அதிபர் முயற்சி

வேலணைப் பகுதியில் அமை ந்துள்ள சிறிலங்கா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட் டிருக்கும் பூநகரி வெட்டுக் காடு என்னும் இடத்தைச் சேர்ந்த சுமார் முப்பது பொது மக்களின் பெயர் விபரங்களை கூட்டுப்படைகள் தலைமையக த்திடம் இருந்து பெறுவதற்கு தான் முயற்சி செய்வதாக யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித் தார்.

இம்முறை கொழும்பு செல் லும் பொழுது அங்கு சம்பந் தப்பட்ட அதிகாரிகளிடம் கதைத்து இவர்களின் பெயர் விபரங்களைப் பெறுவதற்கு முயற்சியை மேற்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கழுத்துறை மகசின் ஆகிய வற்றில் தடுத்து வைக்கப்பட் டுள்ள கைதிகளை விடுத்து ஏனைய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளின் பெயர் விபரங் களை தனக்கு எடுத்துத்தரும் படி ஏற்கனவே கொழும்பு சென்றபொழுது அங்கு சம்பந் தப்பட்ட அதிகாரிகளை கேட் டிருந்தார் என்பது குறிப்பிட த்தக்கது. (பா)

# வடக்கிற்கு புதிய தளபதியாக பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தனா?

## விசுவாசிகளை நியமிக்க ஹமில்டன் விருப்பம்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கைகள் மீண்டும் கூட் டுப் படைகளின் தலைமையின் கீழ் (ஜே. ஓ சி) கொண்டு வரப்பட்டுள்ளதைத் தொடர் ந்து வடபகுதியில் புதிய நிய மனங்கள் நடைபெறும் என கொழும்பிலிருந்து வரும் தக வல்கள் தெரிவிக்கின்றன. இந் நியமனங்களில் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தனக்கு விசுவாசமான தளபதிகளை நியமிப்பதில் அக்கறை காட்டு வதாகவும் தெரிகிறது.

தற்போது வடபிராந்திய இராணுவ தளபதியாக இருக் கும் மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா ஏற்கனவே இராணுவ தலைமை அதிகாரியாக நிய மிக்கப்பட்டுள்ளார். அடுத்த சில தினங்களில் அவர் கொ ழும்பு வந்து புதிய பதவியை பொறுப்பேற்க இருக்கிறார் என்றும்,

வடபகுதி இராணுவ தளப தியாக பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தன நியமிக்கப்பட இருக்கிறார் என்றும் தெரி விக்கப்படுகிறது.

அத்துடன் இப்போது கூட் டுப்படைகளின் தலைமையகத் தில் கடமையாற்றும் கேணல் சரத் முனசிங்க வடபகுதிக்கு அனுப்பப்பட்டு இராணுவப் பிரிவொன்றுக்கு கமாண்ட ராக நியமிக்கப்பட இருக்கி றார்.

## சேவைக்கால பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட ஆரம்பப் பாடசாலைகளிலும், பாடசாலையின் ஆரம்பப்பிரிவு களிலும் போதிக்கும் ஆசிரியர் களுக்கான சேவைக்காலப் பயி ற்சி வகுப்புக்கள் இவ்வாரத் தில் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் பதினாறாம், பதி னேழாம், பதினெட்டாம்திகதி களில் யா/ கோப்பாய் கிறிஸ் தவக் கல்லூரியிலும், இராம நாதன் கல்லூரியிலும் ஆண்டு ஒன்று முதல் ஆண்டு ஐந்து வரையான வகுப்புக்களில் போதிக்கும் ஆசிரியர்களுக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# யாழ். கடத்தவிருந்த பற்றிகள் பிடிபட்டதாம்

பொலிஸ் நடாத்தும் வழ மையான சோதனைகளின் போது யாழ்ப்பாணத்துக்குக் கடத்துவதற்காகப் பதுக்கி வைத்திருந்ததாகக் கருதப் படும் 9,870 பென் டோர்ச் பற்றிகளைப் பொலிசார் கைப்பற்றினர். கொச்சிக் கடையில் ஒரு வீட்டில் நிறுத்தி வைத்திருந்த ஹைஏஸ் வாக னம் ஒன்றிலிருந்தே பற்றிகள் கைப்பற்றப்பட்டன. வாகனத் துடன் மூன்று பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா வழியாக இந்த பற்றிகள் யாழ்ப்பாணத்துக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முதியவர் சுட்டுக் கொலை?

(அம்பாறை)

பட்டிருப்பு பகுதியைச் சேர்ந்த குடியேற்றக் கிராமத் தில் வசிக்கும் முருகப்பன் பர சுராமன் என்ற 65வயதுடைய முதியவர் சிங்கள ஊர்காவல் படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரண மடைந்திருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின் றது. எருமைமாடுகளை மேய்த்து வருவதற்காக பக்கி எல்லைப் பகுதிக்கு சென்ற இவர் ஐந்து தினங்களுக்குப் பின்பும் திரும்பி வரவில்லை எனவும், அவர்சென்றபகுதியில் துப்பாக்கிச் சூட்டுச்சத்தங்கள் கேட்டதாகவும் அப்பகுதி வாசிகள் கூறுகின்றனர்.

# இராணுவத்தின் பிடியிலிருந்து 36 பேர் நேற்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கில் சிறிலங்கா இராணுவத்தினர் அண்மை யில் மேற்கொண்ட இராணுவ முற்றுகையின் போது அகப் பட்ட பொதுமக்களில் தமிழர் ஒருவரைத் திருமணம் செய்த சிங்களப்பெண் உட்பட36பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

இளவாலை கன்னியர் மடத் தில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டிருந் தோரில் 36 பேரையே செஞ்சி லுவைச் சங்கம் பொறுப் பேற்று குமாரி கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்து வந்தது. பின்னர் அங்கிருந்து நேற்று மாலை அவர்கள் தமது சொந்தஇடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்வாறு இராணுவத்தினரி டமிருந்து விடுவிக்கப்பட்டோர் பெயர் விபரங்கள் வருமாறு: பத்துப்பனையடி அளவெட்டி தெற்கைச்சேர்ந்த குமாரசாமி -கோபாலசாமி(59), கோபால சாமி சோமாவதி (55) கோ. ஆனந்தி (11), வல்லிபுரம் தம்பிஐயா (72) தம்பிஐயா வாமதேவன் (36), சின்னத் துரைசந்திரசேகரம்(வயது53), அப்பாத்துரை நவரத்தினம் (வயது 53) நவரத்தினம் சத் தியகுகன் (வயது 16), நவரத் தினம் சத்தியநிதி (வயது 13), அளவெட்டி தெற்கு பத்துப் பனையடியைச் சேர்ந்த சதா சிவம் வீரசிங்கம் (வயது 62), வீரசிங்கம் இராசமணி (வயது 59), உருத்திராபதிநந்தபாலன் (வயது 12), குமாரு சுந்தர

[4 ஆம் பக்கம் பார்க்க]

# மீட்பு நிதி சேகரிப்பு

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர் களுக்கான மீட்பு நிதி சேகரி ப்பு நாளை பிற்பகல் இரண்டு மணி முதல் ஐந்து மணி வரை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெறுமென தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பிரிவினர் தெரிவித்துள் ளனர்.

# புதிய எழுதுவினைஞர் தகைமைகள் பரிசீலனை

அண்மையில் போட்டிப் பரீட்சை மூலம் வட கிழக்கு மாகாண அரச திணைக்களங் களுக்கு நியமிக்கப்பட்டவர்க ளில் யாழ். கல்வித் திணைக் களத்திலும் கோட்டக் கல்வி அலுவலகங்களிலும் நியமனம் செய்யப்பட்டு அமைய அடிப் படையில் கடமையாற்றும் எழுதுவினைஞர்களின் கல்வித் தகைமை சப்பந்தமான சான் றிதழ்கள் வட கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாள ரின் பிரதிநிதிகளினால் இம் மாதம் 20 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு யாழ் செயல கத்தில் பரிசீலனை செய்யப் பட உள்ளதாகயாழ். மாவட்ட ஆணையாளரும் அரச அதிப ருமான திரு. கா. மாணிக்க வாசகர் சம்பந்தப்பட்ட எழுது வினைஞர்களுக்கு கடித மூலம் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கு இந்நாளில் கடமை லீவு வழங்கி இதில் தவறாது பங்கு கொள்ள அனுப்பி வைக்குமாறு யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளரை இவர் கோரி கடிதம் ஒன்றை யும் அனுப்பியுள்ளார்.

# இனப்பிரச்சினை தொடர்பாக கட்சிகளுக்கிடையில் பேச்சு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான பேச்சுக்களில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையை போக்கும் முயற்சி யில் தமிழர் விடுதலைக் கூட் டணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றுக்கு இடையி லான உத்தியோக பூர்வ மற்ற பேச்சுக்கள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்க முன்னிலை யில் இடம் பெற்றுள்ளன.

பிராந்திய அமைப்பு தொடர்பான மங்கள முனசிங் கவின் யோசனைகள் இச்சந் திப்பின்போது தமிழர் விடுத லைக் கூட்டணியிடம் கைய ளிக்கப்பட்டுள்ளது. இச்சந்திப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தப்பி ஓடிய கான்ஸ்டபிள் வீதிசோதனையில் சிக்கினார்

[கண்டி]

ரிசேவ் பொலிஸ் படை யைச் சேர்ந்த ஒருவரிட மிருந்து சீருடைகள் அடங்கிய பொதி யொன்றையும், இருபது 84 எம். எம். தோட்டாக்களை யும் பொலிஸார் கைப்பற்றி னர்.

கண்டி - திருக்கோணமலை பெருந்தெரு 6 ஆவது மைல் வீதித்தடையில் பொலிசார் சோதனை மேற்கொண்ட போது ரிசேவ் பொலிஸிடம் மேற்கூறிய பொருள்கள் கைப் பற்றப்பட்டன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

# சேவைக்குத் திரும்பாத ஆசிரியர்கள் இடைநிறுத்தம்

(நல்லூர்)

இராணுவ நடவடிக்கை கார ணமாக வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம் பெயர்ந்து சென்று ஏனைய மாகாணப் பாடசாலைகளில் தற்போது கற்பிக்கும் தமிழ் ஆசிரியர்களை உடனடியாக தமது பழையபாடசாலைகளு க்கு திரும்பி கடமையை மேற் கொள்ளுமாறு கல்வி அமைச்சு சகல மாகாண கல்விப் பணிப் பாளர்களுக்கும் அறிவித்துள் ளது.

மேற்கூறிய ஆசிரியர்கள் தமது பழைய பாடசாலைகளு க்கு திரும்பாவிட்டால் அவர் களது சேவையை இடைநிறுத் துமாறும் இவர்கள் கோரப் பட்டுள்ளார்கள்.

மலையக தமிழருக்கான

# அடையாள அட்டை விநியோகத்தில் புதிய திட்டம்

மலையக மக்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்குவதில் புதிய திட்ட மொன்றை செயற்படு த்த ஆட்பதிவுத் திணைக்களம் முடிவு செய்துள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

இவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க ஜனவசம அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் ஆகியவற் றின் மூலம் ஏற்பாடுகள் செய் யப்பட்டது என்றும்,

ஆனால் இப்போது தோட் டங்களின் நிர்வாகம் தனியாரி டம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய திட்டம் செயல்படவுள்ளதாகவும் ஆட் பதிவுத் திணைக்களம் தெரி வித்துள்ளது.

## நால்வர் விடுதலை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் சிறிலங்கா இரா ணுவத்தினரால் தடுத்து வைக் கப்பட்டிருக்கும் பொது மக்க ளில் மேலும் நான்கு பேர் விரைவில் விடுதலை செய்யப் பட உள்ளனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

வடக்கு - கிழக்கிற்கான நிதி ஒதுக்கீட்டை

# சிங்களபகுதிக்குப் பயன்படுத்த அரசாங்கம் தீவிர முயற்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்குப் பகுதி களுக்கென பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்டத் தின் கீழ் ஒதுக்கீடு செய்யப் பட்ட நிதி இலங்கையின் ஏனைய பகுதிகளின் அபிவிருத் திக்குப் பயன்படுத்துவதற்கு அரசு முயற்சிசெய்துவருகிறது,

அரசின் பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்ட த்தின் கீழ் வடக்கு கிழக்குப் பகுதி பாராளுமன்ற உறுப் பினர்களினூடாக ஒதுக்கீடு செய்யப்பட்ட அபிவிருத்தி நிதியை ஏனைய சிங்களப் பிர தேசங்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் திட்டம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

வனவளம் காத்து மழைவளம் பேணுவோம்

## வரி விளம்பரம்

**ஒத்துமாறல்**

கொழும்பு மாவட்டம் வத்தளை தமிழ்ப் பாடசாலை ஒன்றில் உதவி ஆசிரியையாகக் கடமை புரியும் கலைப்பட்டதாரி ஆசிரியை ஒருவர் யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் பெற விரும்புகின்றார் ஒத்துமாற விரும்பும் ஆசிரியர்கள் நா. சனகலிங்கம், நாமகள் ஒழுங்கை கொக்குவில் கிழக்கு என்னும் விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும்.
(3467)

**ஆண்டு 5 புலமைப்பரிசில்**

அடுத்த புலமைப்பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582,Stanley Road Jaffna.
(சி 5169)

**கடிகாரமா? ரேடியோவா?**

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்காவா ச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)


## பஞ்சு, பண்டேஜ் தட்டுப்பாடு

[யாழ்ப்பாணம்]

மானிப்பாயில் இயங்கி வரும் தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையில் பஞ்சு, பண்டேஜ் ஆகியனவற்றிற்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால் காயங்களுக்கு மருந்து கட்ட வருபவர்கள் பழைய சீலைத்துணிகளையும் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது, (42)

**தையல் பயிற்சி**

# விடுதலைப்புலிகள் அதிரடித்தாக்குதல்; திருகோணமலையில் ராணுவம் அச்சம்

### - மாவட்ட தளபதி வசந்தன் தகவல்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகளின் தீவிர அதிரடித் தாக்குதல்களினால் அச்சமடைந்துள்ள இராணுவத்தினர் புதிய முகாம்களையும் காவலரண்களையும் அமைத்து வருவதாக விடுதலைப் புலிகளின் திருமலைமாவட்டத் தளபதி திரு. வசந்தன் தெரிவித்துள்ளார். 'புலிகளின் குரல்' வானொலிக்கு அவர் அளித்துள்ள பேட்டியிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருக்கோணமலை - மணலாறு மாவட்டங்களுக்கிடையில் தென்னமரவாடிச் சந்தியிலும் புல்மோட்டை மதவாச்சி வீதியில் 13 ஆம் கட்டையிலும் இரு முகாம்களை இராணுவத்தினர் அமைத்துள்ளனர் மதவாச்சி - புல்மோட்டை வீதியில் மேலும் பல இராணுவ முகாம்களை அமைக்க முயன்று வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை திருமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் தீவிரமடைந்ததனை அடுத்து படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

கடந்த யூலை மாதம் 10-ம் திகதி கந்தளாய் றேடியோ சிலோன் இராணுவ முகாம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தினர்

யூலை 29 ஆம் திகதி திருக்கோணமலை. சாம்பல் தீவு பொலிஸ் இராணுவ கூட்டு முகாம் தகர்க்கப்பட்டது

கடந்த ஒகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி மதிலாறு, கல்லாறு வீதிகளில் இராணுவ 'ட்றக்' வண்டியொன்று புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலுக்கு உள்ளானது.

கடந்த செப்டம்பர் மாதம் 9 ஆம் திகதி 'மங்கி பிறிட்ஜ்' இராணுவ காவலரண்கள் புலிகளால் தகர்க்கப்பட்டன. செப்டம்பர் 21 ஆம் திகதி திருக்கோணமலையில் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது.

இவ்வாறு திருக்கோணமலை மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய பல முக்கிய அதிரடித் தாக்குதலின்போதும் சிறிலங்கா இராணுவத்தினர் பலத்த இழப்புக்களை சந்தித்தனர் என்றும் வசந்தன் தெரிவித்தார்.

## கடற்படைப்படகு மூழ்க சீரற்ற காலநிலை காரணம்

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படைக்கு சொந்தமான கந்துல என்னும் படகு மோசமான காலநிலை காரணமாக சிலாபம் பகுதிக்கு அருகே தலவில கடற்பரப்பில் மூழ்கியுள்ளது.

கொழும்பிலிருந்து மன்னார் பகுதியில் நிலை கொண்டிருக்கும் படையினருக்கு தேவையான பொருள்களை ஏற்றிச்சென்று கொண்டிருந்த போகே சூறாவளிக் காற்று காரணமாக கடந்த வெள்ளியன்றிரவு கடலினுள் மூழ்கியது.

இப்படகில் இருந்த இருபத்தைந்து சிப்பந்திகளும் பின்னர் கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

## தோட்.நிர்வாகத்தைஎதிர்த்து தொழிலாளர்வேலைநிறுத்தம்

(கண்டி)

தோட்ட நிர்வாகத்தின் நடவடிக்கைகளை எதிர்த்து வட்டவளை தோட்டத் தொழிலாளர்கள் கடந்த இருவாரங்களாக வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர் என்று பன்விலை இ தொ.கா. பிரதிநிதி ஜோதிக்கண்ணன் தெரிவித்தார்.

ஓய்வுபெற்ற தோட்டத் தொழிலாளி ஒருவர் வீட்டில் இல்லாத சமயம் அவரது வீடு உடைக்கப்பட்டு வேறொருவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த ஓய்வுபெற்ற தொழிலாளி வீடு திரும்பிய போது அவர் ஒரு பயங்கரவாதியென தோட்ட நிர்வாகத்தால் பொலிசாருக்கு தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தொழிலாளி கைது செய்யப்பட்டார் இவ்வாறாக தோட்ட நிர்வாகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எதிர்த்து இங்கு வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## வலிமேற்குப் பகுதி சனசமூக நிலையங்களில் குடிநீர் வசதி அமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஏழுசனசமூக நிலையங்களில் மக்கள் குடிதண்ணீர் பெறுவதற்கு வசதியாக குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

சங்கானை பாரதி சனசமூக நிலையத்திலும் அராலிமேற்கு நல்லொளி சனசமூக நிலையத்திலும் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து மற்றைய சனசமூக நிலையங்களிலும் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. [42]

## யு. எஸ். எயிட் கடன்திட்டம்; 7500விவசாயிகள் சேருவர்

(யாழ்ப்பாணம்)

யூ எஸ். எயிட் ஸ்தாபனத்தின் விவசாயத்திட்டத்தில் விவசாயிகள் கடன் வசதிகளைப் பெறவுள்ளனர்.

மேற்படி திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 7500 விவசாயிகள் சேர்க்கப்படுவார்கள் இவர்களில் பெரும்பாலானோர் இடம்பெயர்ந்த விவசாயிகளாகவே இருப்பார்கள்.

2880 ஏக்கர் நிலத்தில்மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டம் பெரும்பாலும் சாவகச்சேரி மருதங்கேணிப்பகுதிகளிலேயே ஆரம்பிக்கப்படலாமென அரசசார்பற்ற இணையத்தின் அதிகாரி தெரிவித்துள்ளார் (42)

## விமான மூலம் அவசர நோயாளிகள்

(வடமராட்சி)

யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக மூன்று அவசர நோயாளிகள் பருத்தித்துறை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டனர்

இவர்கள் ''குமாரி'' கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு கொண்டு செல்லப்பட்டு

## கருத்தரங்கு

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தின் ஆதரவில் பெண்களின் நோய்கள் பற்றிய கருத்தரங்கும் யோக சிகிச்சை செய்முறை விளக்கமும் 18ஆம் திகதி மாலை 3-30 மணிக்கு யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் இடம் பெறும்.

இக்கருத்தரங்கில் அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தின் பணிப்பாளர் யோகாசனக் கலாநிதி ஸ்ரீ

## 4-ம் ஆண்டு நினைவுகள்



## சமுதாய தொடர்பு ரீதியில் சிறந்த பாடசாலை தெரிவு

சமுதாயத் தொடர்புகளின் மூலம் அபிவிருத்தியடைந்துள்ள மிகச்சிறந்த பாடசாலையை தெரிவு செய்யுமாறு சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களையும் கல்வி உயர் கல்வி அமைச்சு கேட்டுள்ளது. இக்தெரிவை கோட்டரீதியாக மேற்கொண்டு பின்னர் மாகாண ரீதியாக சிறந்த பாடசாலையை தெரிவு செய்யுமாறும்பணிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளை மதிப்பீடு செய்யும் போது பெரிய பாடசாலைகள், வசதி நிறைந்த பாடசாலைகள் என்ற ரீதியில் தெரிவு செய்யாமல் அடிமட்டத்திலுள்ள மக்களின் பங்களிப்பைக் கொண்டு மதிப்பீடு செய்யுமாறும் பணிக்கப்பட்டுள்ளது. பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் அதிகளவில் பங்குபற்றுமாறும் முக்கியத்துவம் அளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## நினைவு கூருகின்றோம்...

**1992-10-15**

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில்
உயிலங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால்
கைதுசெய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட

★ மொசாட் (ஏகாம்பரம் ராசு-உயிலங்குளம் மன்னார்]

1986 ஆம் ஆண்டு மன்னார் - பெரியபண்டிவிரிச்சான்பகுதியில்
சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில்
வீரச்சாவெய்திய

நாயுடு (மரியாம்பிள்ளை பத்திநாதன் - சின்னப்பண்டிவிரிச்சான், மன்னார்)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காப் படையினரின்
தாக்குதலில் வீரச்சாவெய்திய

கார்த்திக் (குஞ்சுத்தம்பி சுந்தரலிங்கம் - ஆரையம்பதி 03, மட்டக்களப்பு)

அலிப் / கேசவன் (மூத்ததம்பி உதயகுமார்-ஆரயம்பதி - 03, மட்டக்களப்பு)

சுவீந்திரன் (இராமநாதன் சந்திரகுமார் - தாண்டவன் வெளி. மட்டக்களப்பு)

பேதுறு (சுவாமிநாதன் எட்வேட் - மட்டக்களப்பு)

மித்திரன் (வாமதேவன் அகிலன் - பாரதிவீதி, மட்டக்களப்பு)

சந்திரன்

1987 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தால்
சுடப்பட்டு வீரச்சாவெய்திய

★ சுப்பிரமணியம் சின்னையா (கதிரவெளி வாகரை. மட்டக்களப்பு)

மட்டக்களப்புப் பகுதியில் இந்தியப்படையினரின்
சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு
வீரச்சாவெய்திய

மாத்தையா (விமலநாதன் - மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு)

யாழ், கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினருடனான
சமரில் வீரச்சாவெய்திய

முகம்மது / மருத்தீன் (சந்தியோகு மருத்தீன் -உயித்தராசன்குளம், மன்னார்)

கோப்பாய்ப் பகுதியில் இந்தியப்படையினரின்
எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

முத்து (மலையகம்)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய

ஜேம்ஸ் (இராசையா பாபு கோணேசன் - நுணாவில் சந்தி, சாவகச்சேரி, யாழ)

கூல்பா' அருகாமையில்)
யாழ்ப்பாணம். (சி-5152)

## பஞ்சு, பண்டேஜ்
# தட்டுப்பாடு

[யாழ்ப்பாணம்]

மானிப்பாயில் இயங்கி வரும் தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலையில் பஞ்சு, பண்டேஜ் ஆகியனவற்றிற்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால் காயங்களுக்கு மருந்து கட்ட வருபவர்கள் பழைய சீலைத்துணிகளையும் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது, (42)

## தையல் பயிற்சி நிலையம்

(குருநகர்)

சிநேகர் நிறுவன ஆரம்ப சர்த்தாவான அமரர் இராசேந்திரா நினைவாக குருநகரில் தையல் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

புனிதவளன் விளையாட்டுக் கழகம் ஆரம்பித்து வைத்துள்ள மேர்படி தையல் பயிற்சி நிலையத்தில் ஆரம்பத்தில் 15 யுவதிகள் பயிற்சிபெற அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்ப்படுகிறது. (21)

# கிழக்கு
## கடற்படை தளபதி
# ஓய்வு

(கொழும்பு)

கிழக்குப் பிராந்திய சிறிலங்கா கடற்படைத் தளபதியாக நீண்டகாலம் கடமையாற்றிய ரியல் அட்மிரல் நோமன் குவின்டஸ் விக்கிரமரத்ன ஒய்வு பெற்றுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முப்பது வருட காலத்திற்கு மேல் நாட்டின் பல்வேறு பிராந்தியங்களில் இவர் கடமையாற்றியுள்ளார் என்றும்,

இம்மாதம் 5 ஆம் திகதி இவர் ஓய்வு பெற்றார் என்றும், இவரின் ஓய்வை சிறிலங்கா ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா அங்கீகரித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

## கடலில் மூழ்கி நினைவிழந்தனர்

(யாழ்ப்பாணம்)

வல்லிபுரக் கோவிலின் கப்பல் திருவிழா அன்று பக்தர் கூட்டம் கடலில் தீர்த்தமாடிக் கொண்டிருக்கும் பொழுது இரண்டு பக்தர்களைக் கடல் அலை இழுத்துச் சென்றதில் நினைவிழந்த நிலையில் ஏனைய பக்தர்களினால் காப்பாற்றப்பட்டனர். இதில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. இச்சம்பவம் கடந்த ஞாயிறன்று இடம் பெற்றது. (பா)

வலிமேற்கு பிரதேச சபைக்குட்பட்ட ஏழுசனசமூக நிலையங்களில் மக்கள் குடிதண்ணீர் பெறுவதற்கு வசதியாக குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

சங்கானை பாரதி சனசமூக நல்லொளி சனசமூக நிலையத்திலும் கிணறுகள் அமைக்கப் பட்டு வருகின்றன.

தொடர்ந்து மற்றைய சனசமூக நிலையங்களிலும் குழாய்க் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன. [42]

# 4-ம் ஆண்டு நினைவுகள்



## செல்வன் சகாதேவன் கீதன்

பிறப்பு 9.11.1967 அழிப்பு 29.๒.1988

திதி: 15.10.1992

கீதன் பிறந்து வளர்ந்து தொழில் பல கற்றான்
சகோதரர் நால்வருடனும் அம்மா அப்பா நண்பருடன்
பலகாலம் வாழ்வேன் என்று பலகோடி ஆசைகளை
நெஞ்சகத்தில் சுமந்து என்நாளும் புன்னகைபூத்த
முகத்துடன் திரிவீரே
முற்பிறப்பில் நாம் செய்த வஞ்சனையாதோ
இப்பிறப்பில் யார்தான் செய்த வஞ்சனையோ
ஆயிரத்திதொளாயிருத்தி எண்பத்தெட்டுப் புரட்டாதி
இருப்பத்திஒன்பது வியாழக்கிழமை தனிலே
அபரபக்க சதுர்த்திதியில் கண்மூடிக் கண்விழிக்கு
முன்னே துடிதுடித்து மாண்டீரோ
தினமும் நாம் கண்ணீரால் முகம் அலம்பி
ஒளி இழந்து இருள் சூழ்ந்த இப்புவியில்
நீர் போன வழி தேடி நின்று மறுபிறவிதனில்
அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இப்புவியில் நீவிர்
ஐவரும் தப்பாமல் வந்த பிறந்து
பல்லாண்டு வாழ வேண்டும் எனறு இறைவனை
வேண்டிநிற்கும்.

கீதன் சூட்டி மோட்டார் சயிக்கிள் பழுது பார்ப்பவர்கள் இராமலிங்கம் வீதி

அன்பு அப்பா, அம்மா, அண்ணாமார்: கண்ணன், ராதா
அக்கா: ஜெயா, தம்பி: சூட்டி,
மைத்துனன்: ரவி, அண்ணி: சறோ,
பெறாமக்கள்: சாம்பவி, மது

(சி-5220)

தின விவசாயத்திட்டத்தில் விவசாயிகள் கடன் வசதிகளைப் பெறவுள்ளனர்.

மேற்படி திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 7500 விவசாயிகள் சேர்க்கப்படுவார்கள் இவர்களில் பெரும்பாலானோர்

2880 ஏக்கர் நிலத்திலமேற் கொள்ளப்படவிருக்கும் இத்திட்டம் பெரும்பாலும் சாவகச்சேரி மருதங்கேணிப்பகுதிகளிலேயே ஆரம்பிக்கப்படலாமென அரசசார்பற்ற இணையத்தின் அதிகாரி தெரிவித்துள்ளார் (42)

# விமான மூலம்
## அவசர நோயாளிகள்

(வடமராட்சி)

யாழ். போதனா வைத்திய சாலையிலிருந்து கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படுவதற்காக மூன்றுஅவசர நோயாளிகள் பருத்தித்துறை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டனர்

இவர்கள் ''குமாரி'' கப்பல் மூலம் காங்கேசன் துறைக்கு கொண்டு செல்லப்பட்டு பலாலியூடாக விமான மூலம் கொழும்பிற்கு கொண்டு செல்லப்படவுள்ளனர்

இதற்கான ஒழுங்குகளை செஞ்சிலுவைச் சங்கத்தினர் செய்துள்ளனர் (82)

## யாழ்.வந்துள்ளனர்

(குருநகர்)

கத்தோலிக்க திருச்சபை மேற்றாசனங்களின் சமூகப் பணியகத்தின் இணைப்பகத் தலைவர் வண - ஒஸ்வால்ட் பேற் நேற்று முன்தினம் யாழ். வந்துள்ளார்.

வண - ஒஸ்வால்ட் பேற்றும் குழுவினரும் யாழ்ப்பாணத்தில் நான்கு தினங்கள் தங்கி நின்று மறைமாவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் மேற்கொண்டு வரும் சமூகப் பணிகளைப் பார்வையிட்டு நெறிப் படுத்தவே வந்துளாரென்றும் யாழ். திருச்சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (21)

## வாகன விபத்தில் ஐவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மோட்டார் வாகன விபத்தில் சாரதி உட்பட ஐந்து பேர் படுகாயமடைந்தனர்

ஆவரங்கால் பகுதியில் செவ்வாய் நண்பகல் இரண்டு மணியளவில் பயணிகளை ஏற்றிச் சென்ற மினிபஸ் ஒன்று மற்றோர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதால் உதயசூரியன்(வயது 35) சூரியராஜ் (வயது 24) அச்சுவேலியைச் சேர்ந்தவர்களான ந பாமினி(வயது 18)ந நந்தினி (வயது 11) சி. பத்மாவதி (வயது 68)ஆகியோர் படுகாயமடைந்தனர். இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி விபத்தில் சிக்கிய சாரதியின் வலதுகால் அகற்றப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (ச)

## கருத்தரங்கு

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தின் ஆதரவில் பெண்களின் நோய்கள் பற்றிய கருத்தரங்கும் யோக சிகிச்சை செய்முறை விளக்கமும் 18ஆம் திகதி மாலை 3-30 மணிக்கு யாழ்ப் பாணம் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் இடம் பெறும்.

இக்கருத்தரங்கில் அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தின் பணிப்பாளர் யோகாசனக் கலாநிதி ஸ்ரீ சுவாமி சிதானந்த யோகி சரஸ்வதியும் இன்னும் பல யோகாசன நிபுணர்களும் கலந்து கொண்டு கருத்துரைகளும்செய்முறை விளக்கங்களும்அளிப்பர். (42)

# திருட்டு

(பருத்தித்துறை)

பருத்தித்துறையிலுள்ள வீடொன்று பட்டப்பகலில் உடைக்கப்பட்டு தங்கநகை, பணம், பாவனைப்பொருள்கள் உட்பட 40,000 ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ காவல்துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது

கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை புலோலி வடகிழக்கில் வசிக்கும் இலங்கை மின்சார சபை ஊழியரான திரு. ச. றங்கநாதன் என்பவர் வீட்டைப் பூட்டிவிட்டு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு காலை 9 30மணிபோல் சென்றதாகவும் பின்னர் பிற்பகல் 2.00 மணிபோல் ஆலய தரிசனம் முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்தபோது வீடு உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தெரிய வந்ததாகவும் புகார் செய்யப் பட்டுள்ளது. (25)

## குழந்தைகளுக்கு தடுப்பூசி

விரைவாக பரவி வரும் தொற்று நோய்களுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நவாலி வை.எம்.சி எஇல்குழந்தைகளுக்கான தடுப்பூசி போடப்பட்டது.

இதன்படி ஒன்றரை வயது குழந்தைகளுக்கான தடுப்பூசி போலியோ நோய் தடுப்பூசி என்பன சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு போடப்பட்டது.

இவ்வூசியை போட்டுக் கொள்ள விரும்பும் பெற்றோர்கள் வை.எம்.சி.எபொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளும்படிகேட்கப்படுகின்றனர் (07)

1987 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தால்
சுடப்பட்டு வீரச்சாவெய்திய

★ **சுப்பிரமணியம் சின்னையா** (கதிரவெளி வாகரை. மட்டக்களப்பு)

மட்டக்களப்புப் பகுதியில் இந்தியப்படையினரின்
சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு
வீரச்சாவெய்திய

**மாத்தையா** (விமலநாதன் - மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு)

யாழ், கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினருடனான
சமரில் வீரச்சாவெய்திய

**முகம்மது / மருத்தீன்** (சந்தியோகு மருத்தீன் -உயிர்த்தராசன்குளம், மன்னார்)

கோப்பாய்ப் பகுதியில் இந்தியப்படையினரின்
எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**முத்து** (மலையகம்)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய

**ஜேம்ஸ்** (இராசையா பாபு கோணேசன் - நுணாவில் சந்தி, சாவகச்சேரி, யாழ)

யாழ். கல்லுண்டாய் வெளியில் இந்தியபடையினருடனான
சமரில் வீரச்சாவெய்திய

**ஜான்** (நாகநாதன் ராஜாரவி - கைதடி வடக்கு, யாழ்.)

யாழ். கொய்யர்த்தோட்டம் பகுதியில்
இந்தியப்படையினரால் படுகொலைசெய்யப்பட்ட
தமிழ்ப் பொதுமகன்

மட்டக்களப்பில் இந்தியப் படையினரால்
சுட்டுக்கொல்லப்பட்ட
ஒரு குழந்தை, ஒரு பெண்

1988 ஆம் ஆண்டு இணுவில் பகுதியில்
இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின்போது
வீரச்சாவவய்திய

**ரதி** (கந்தசாமி ரதிதரன் - சுதுமலை வடக்கு, யாழ்)

இதே ஆண்டு இந்தியப் படை சுட்டதில் வீரச்சாவெய்திய

**ரவி** (முத்துதவச்செவ்வன் சுதுமலை வடக்கு. யாழ்)

1990 ஆம் ஆண்டு வேம்பங்குளம் பகுதியில்
மிதிவெடி விபத்தில் எமைப்பிரிந்த

**அசோக்** இருஸ்ணபிள்ளை நாகரட்ணம் - சீனன்குடா திருக்கோணமலை)

வவுனியா செட்டிகுளம் பகுதியில்
எதிர்பாராத விதமாக ஏற்பட்ட உழவு இயந்திரவிபத்தில்
எமைப் பிரிந்த

**நியாந்தன்** (கந்தையா சம்பத் - 411, வாரிக்குட்டியூர், வவுனியா)

1991 ஆம் ஆண்டு சாவகச்சேரிப் பகுதியில்
சிறிலங்காப் படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து
தாக்கியதில் வீரச்சாவெய்திய

**மேஜர் சிறி மாஸ்ரர்** (கனகராசா சிறிதரன் - புத்தூர், மேற்கு. யாழ்)

சாவகச்சேரியில் -சங்கத்தானையில்
சிறிலங்காப் படையினர் உலங்கு வானூர்தியிலிருந்து
மேற்கொண்ட தாக்குதலில் பலியான
கர்ப்பிணியான இளம் தமிழ்ப்பெண்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ்அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்,

## தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-5222)

### சிந்தனைக்கு

தனக்கு ஒரு முகம் காட்டி, ஊரார்க்கு இன்னொரு முகம் காட்டுபவன், நாளடைவில் தன் உண்மையான முகம் எது என்று அறியாமல் திணறுவான்.

— நத்தேனியல் ஹார்த்தார்ன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 15-10- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 023 2330 நிர்வாகபீடம் 2308
த பெ. எண் - 05

# பருவகால அரசியல்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னதாக உகந்த தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டும் என அரசாங்கம் கேட்டிருப்பதாகத் தெரியவருகின்றது மேலும், அதற்கேற்றவாறு செயற்குழுவின் செயற்பாடுகளை துரிதப்படுத்த வேண்டும் எனத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளிடமும் அரசாங்கம் கேட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவின்பால் பெரிதாக அக்கறை காட்டாது, இராணுவத்தீர்வு பற்றியே பேசிவந்த சிறிலங்காஅரசாங்கம் மீண்டும்பாராளுமன்றத்தெரிவுக்குழுபற்றிதற்பொழுது பேசத்தொடங்குகின்றது. அதாவது, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு குறித்துப் பேசமுற்பட்டுள்ளது.

ஆனால், பாராளுமன்றத் தெரிவுக்குழுவோ, எதுவித தீர்வுத்திட்டத்தையும் முன்வைக்க முடியாத நிலையில் குழம்பிப்போயுள்ளது. தெரிவுக்குழுவில் இருக்கும் சிறு சிறு குழுக்கள் - கட்சிகள் - ஆளுக்கொரு தீர்வுத்திட்டத்தை கையில் வைத்துக்கொண்டு நிற்கின்றன. ஆனால், பெரிய கட்சிகளோ தீர்வுத்திட்டத்திற்கும் எமக்கும் சம்பந்தமில்லை. திட்டத்தை வைத்தால் பரிசீலனை செய்யப்படும் என்ற நிலையில் மாற்றான் தாய் மனப்பான்மையில் உள்ளன.

சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்விற்குஇராணுவ, அரசியல் ரீதியாக இரட்டை அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது ஆனால் இவ் அணுகுமுறை ஒரு வகையில் பருவகால அணுகுமுறை என்றே கூறலாம். போர் நடவடிக்கைகளுக்கு காலநிலை சாதகமாக உள்ள கோடை காலங்களில் இராணுவத்தீர்வை நாடி நிற்பதும், போர் நடவடிக்கைக்கு காலநிலை இடையூறாகவுள்ள காலப்பகுதியில் அரசியல் முயற்சிகள் முன்னெடுப்பதும் அரசாங்கத்தின் வழமையான நடவடிக்கையாகவுள்ளது. கடந்த வருடத்திலும் மாரிகாலத்தில் அரசியல் தீர்வு குறித்து அரசால் பலமாகப் பேசப்பட்டது.

இந்நிலையில்தான், மீண்டும் அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழு பக்கம் தனது கவ

# முகவர்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்படும்

(கொழும்பு)

வெளிநாடுகளில் வேலை பெற்றுத் தருவதாக உறுதி அளித்து ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களிடம் பல இலட்ச ரூபாவைப்பெற்று ஏமாற்றியதாகச் சொல்லப்படும் கொழும்பு —தெகிவளை - நீர்கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள லைசென்ஸ் பெறாத ஏழு தொழில் முகவர் நிலையங்களின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு தொழில் முன்னிலைப்பயிற்சி அமைச்சு சி ஐ. டி. யினரை அழைத்துள்ளது

இந்தப் போலி முகவர் நிலையங்களினால் சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஏமாற்றப்பட்டு நிர்க்கதிக்குள்ளான பலர் அமைச்சுக்கு புகார் செய்துள்ளனர்,

இந்தப்போலி முகவர் நிலையங்களினால் ஏமாற்றப்பட்ட ஒவ்வொருவரும் தலா 75000 ரூபாவிலிருந்து 1,00,000ரூபாவைச்செலுத்தி உள்ளனர் என அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் சம்பவதில் சம்பந்தப்பட்ட லைசென்ஸ் பெறாத தொழில் முகவர் நிலையங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமரும் தொழில் முன்னிலைப் பயிற்சி அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்க கடந்த வாரம் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

# யாழ். மாவட்டத்தில் உதைபந்தாட்டப் போட்டி

(நமது நிருபர்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையோயான உதைபந்தாட்டப் போட்டியில் இன்று யாழ்.இந்துக்கல்லூரிமைதானத்தில் பிற்பகல் 3-00 மணிக்கு 17 வயது பிரிவில் அராலி இந்து எதிர் நெல்லியடி மகா வித்தியாலயம் பிற்பகல் 4-00 மணிக்கு 17 வயது பிரிவில் புனித ஹென்றியரசர் எதிர் யாழ்.மத்தியகல்லூரி

சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானததில் பிற்பகல் 3 00 மணிக்கு 19 வயது பிரிவில் மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் ஹாட்லிக்கல்லூரி பிற்பகல் 4 00 மணிக்கு 19 வயது பிரிவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் மகாஜன கல்லூரி.

# மகளின் விடுதலை வேண்டி தாய் மனுத் தாக்கல்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தொண்டர் ஆசிரியையான தனரோஸ் புளோசம் வேதநாயகத்தை (27) சட்ட வைத்திய அதிகாரி முன் ஆஜர் செய்து அறிக்கை சமர்ப்பிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் வியாழனன்று உத்தரவிட்டுள்ளது.

தாய் அன்னம்மா வேதநாயகம், இலங்கை சட்டத்தரணிகள் சங்க சட்ட உதவி நிலைய சட்டத்தரணி சாமித்தம்பி தில்லையா ஊடாகத் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு வழக்கிலேயே நீதியரசர்கள் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தனர்.

இந்த மனுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க, முல்லைத்தீவு இராணுவ முகாம் கமாண்டர், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகர்,சட்டமா அதிபர்ஆகியோர் பிரதிவாதிகளாவர்.

மனுதார் தமது மனுவில் கூறியிருப்பதாவது; எனது மகள் முல்லைத்தீவு கன்னியாஸ்திரி பாடசாலையைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியையாவார் அவருக்கு வயது 27. அலம்பில் முல்லைத்தீவு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரால் 29-5-92 இல் கைதானார். அதன் பின் அவரின் இருப்பிடம் தெரியவில்லை.

வவுனியா சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் எனது மகள் வவுனியா பொலிஸ்நிலையத்தில்தடுத்து வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. அங்கு விசாரித்ததில் வெலிக்கடைக்கு அனுப்பப்பட்டிருப்பது தெரிய வந்தது. வெலிக்கடை போனபோது பார்க்க அனுமதி கிடைக்கவில்லை. கைதிற்கு காரணம் கூறப்படவில்லை மனக்குழப்பத்திற்கு ஆளாகி இருக்கிறார். அவருக்கு வைத்திய உதவி தேவை.

கைதும், தடுப்பும் சட்டவிரோதம். விடுதலை செய்ய வேண்டும். செலவு தொகை தரவேண்டும்.

மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதியரசர்கள் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டு பதில் தாக்கல் செய்ய இம்மாதம் 23ஆம் திகதி வரை அவகாசம் வழங்கினர்.

# ‘புலிகள் பயங்கரவாத அமைப்பு’ யதார்த்தத்திற்குப் புறம்பானது

## சிங்கள விமர்சகர் நியூட்டன் செனவிரத்னா

‘‘விடுதலைப் புலிகளினால் கட்டைக்காட்டில் தொடுக்கப்பட்ட பாரிய தாக்குதல் நடவடிக்கைகள் விடுதலைப் புலிகளின் பலத்தினையும் சக்தியையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. எனினும் இன்னமும் புலிகளை ஒரு ‘‘பயங்கரவாத அமைப்பு’’ என்ற எண்ணமே சிங்கள மக்கள் மத்தியில் நிலவிவருகின்றது ஆனால் யதார்த்த நிலை அதற்கு மாறாகவே அமைந்துள்ளது’’ இவ்வாறு, சிங்கள அரசியல் விமர்சகரான நியூட்டன் செனவிரத்னா தெரிவித்துள்ளார்.

‘ராவய’பத்திரிகைக்கு அவர் எழுதிய கட்டுரை ஒன்றில் கட்டைக்காட்டில் புலிகள் கைப்பற்றிய இராணுவத் தளபாடங்களின் பெறுமதியானது ஐந்து கோடி ரூபாவாகும். ஆனால் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரைக்கும் இது அவர்களுக்கு ஐந்து கோடி டொலர் பெறுமதி மிக்கதாகும் இந்த ஆயுதக்களஞ்சியத்தை கைப்பற்றிய செயலானது ஆயிரக் கணக்கான படையினரின் உயிருக்கு விடுக்கப்பட்டசவாலாகவே அமைந்துள்ளது

புலிகள் நேரடியான யுத்தங்களைத் தவிர்த்து வருகின்றனர். அதேசமயம் இராணுவ முகாம்களின் மீது தாக்குதல்களைத் தொடுத்து களஞ்சியங்களை முழுமையாக கைப்பற்றிச் செல்லுகின்றனர் நூற்றுக்கணக்கில் இராணுவத்தினரை கொல்லுகின்றனர்.

இவ் ஆயுதங்கள் தவிர மக்கள் தொண்டர்படையினரிடம் இருந்தும் இந்திய இராணுவத்திடம் இருந்தும் வடகிழக்கில் பொலிஸ் ஆயுதப் படை களஞ்சியங்களிலும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் புலிகளிடம் உள்ளன

எந்த ஒரு வெளிநாட்டு உதவியும் புலிகளுக்குகிடையாது இருப்பினும் உலகம் பூராஉள்ள 75 நாடுகளில் உள்ள பல வெகுஜன ஸ்தாபனங்களினதும் செயல்பூர்வமான ஒத்துழைப்பும் உதவிகளும் புலிகளுக்கு கிடைத்து வருகின்றன புலிகளைப் பொறுத்தவரை நிதியும் பல்வேறு வழிகளிலும் கிடைத்து வருகிறது. அத்துடன் இலாபம் தரக்கூடிய தொழில் துறைகளிலும் புலிகள் முதலீடு செய்துள்ளார்கள். இதுவரை ஐந்து வியாபாரக் கப்பல்களைக் சொந்தமாக வைத்துள்ளதாக இரகசிய அறிக்கைகளும் தெரிவிக்கின்றன.

இவற்றை நோக்கும் போது புலிகள் உலகளாவிய அடிப்படையில் எத்துணை பலமாக உள்ளார்கள் என்பதனை நிரூபிப்பதாக அமைகின்றது.

இவ் அடிப்படையில் கட்டைக்காட்டில் ஆயுதக்களஞ்சியம் கைப்புற்றப்பட்டமையானது சிறிய விடயம் போல தோன்றலாம் ஆனால் அது புலிகளின் தாக்குதல் சக்தியை மீளவும் ஒரு தடவை நிரூபித்து உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

# ‘சுவடுகள்’ நூல்வெளியீட்டு விழா

(மானிப்பாய்)

இயல்வாணன் எழுதிய ‘சுவடுகள்’’ நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 18-ம் திகதி (18- 10- 92) அன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ் வெளியீட்டு விழாவில் நிதர்சனம் பொறுப்பாளர் திரு. இ பரதன் வெளியீட்டு உரையையும் மாகாண பிரதி மாவட்ட ஆணையாளர் திரு து. வைத்திலிங்கம் அறிமுக உரையையும், தலைமையுரையை திரு.க சொக்கலிங்கமும், ஆய்வுரைகளை திரு. செம்பியன் செல்வனும், அ. சாந்தன் அவர்களும், நூலாசிரியர் உரையை திரு இயல்வாணன் அவர்களும் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து ‘‘எம் வழிச் சுவடுகள்’’ எனும் கலை நிகழ்வை முது கவிஞர்.ந வீரமணி ஐயர், இளம் கவிஞர் திருமதி. ஆதிலட்சுமி சிவகுமார், வளர் கவிஞர் க. வேல்நஞ்சன் அவர்களும் சேர்ந்து நடத்த உள்ளனர்.

# 2010-ம் ஆண்டில் காடுகள் 3 வீதமாக வீழ்ச்சியடையும்

சிறிலங்காவில் காடுகள் அழிக்கப்படுவது பெரும் பிரச்சினையாக உருவெடுத்து உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைத்தீவில் 1900 ஆண்டளவில் 70 வீதமாக இருந்த காடுகள் 1953 ஆம் ஆண்டளவில் 20 வீதத்தினால் வீழ்ச்சியடைந்து 50 வீதமானது, 1985 ஆம் ஆண்டு முழு நிலப்பரப்பில் காடுகள் 22 வீதமாக வீழ்ச்சியடைந்தன. காடழித்தலானது இதே ரீதியில் தொடருமாயின் 2010 ஆம் ஆண்டளவில் காடுகளின் சதவீதம் 3 வீதமாக வீழ்ச்சியடையும்என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இருப்பினும்நாட்டின்மொத்த நிலப்பரப்பை விட காடுகள் 25 வீதத்தைவிட வீழ்ச்சியடையின் சூழல் மாற்றங்கள் உட்பட ஆபத்தான விளைவுகளை தோற்றுவிக்கும்

காடுகள் இவ்வாறு அழிக்கப்படுவதால் வனவிலங்குகளும், பறவைகளும் உட்பட பல்வேறு உயிரினங்கள் அழிகின்றன அல்லது எண்ணிக்கையில் வீழ்ச்சியடைகின்றன.

வருடாந்தம் ஓர் இலட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் காடுகள் அழிக்கப்படுகின்றன. அதே சமயம் மீள்வனமாக்கல் திட்டத்தின் கீழ் 20 ஆயிரம் ஏக்கரே மரம் நடுகைக்கு உட்படுத்தப்படுகின்றன.

# கால்நடைகளினால் நெற்பயிர் பாதிப்பு

[மானிப்பாய்]

ஒலி பெருக்கி மூலம் பல தடவைகள் அறிவித்து இருந்தும் நவாலிப் பகுதியில் கால்நடைகளின் அட்டகாசத்தினால் காலபோக நெற்பயிர்ச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

நவாலி கள வோடை பகுதியில் ஆடு, மாடு, கோழிகளின் தொல்லை பெருமளவில் அதிகரித்துள்ளது.

இதேவேளை நேற்று நவாலிப் பகுதியில் பயிர்களைச் சேதம் விளைவித்த மூன்று ஆடுகள் விவசாயிகளால் பிடிக்கப்பட்டு சம்பந்தப் பட்டோரால் தண்டப்பணமும் அறவிடப்பட்டது.

மாடு,ஆடு,கோழி என்பனவற்றுக்கு முறையே தால150, 100, 50 ரூபா தண்டப்பணம் அறவிடப்படும் எனநவாலிஉற்பத்திக்குழுவினரால்அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒருதடவை பிடிபட்ட கால்நடை மறுதடவையும் விவசாயிகளால் பிடிக்கப்பட்டால் அவற்றிற்கு உற்பத்திக்குழு தகுந்த நடவடிக்கை எடுக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. [7]

சிகளோ தீர்வுத்திட்டத்திற்கும் எமக்கும் சம்பந்தமில்லை. திட்டத்தை வைத்தால் பரிசீலனை செய்யப்படும் என்ற நிலையில் மாற்றான் தாய் மனப்பான்மையில் உள்ளன.

சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்விற்குஇராணுவ, அரசியல் ரீதியாக இரட்டை அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது ஆனால் இவ் அணுகுமுறை ஒரு வகையில் பருவகால அணுகுமுறை என்றே கூறலாம். போர் நடவடிக்கைகளுக்கு காலநிலை சாதகமாக உள்ள கோடை காலங்களில் இராணுவத்தீர்வை நாடி நிற்பதும், போர் நடவடிக்கைக்கு காலநிலை இடையூறாகவுள்ள காலப்பகுதியில் அரசியல் முயற்சிகள் முன்னெடுப்பதும் அரசாங்கத்தின் வழமையான நடவடிக்கையாகவுள்ளது. கடந்த வருடத்திலும் மாரிகாலத்தில் அரசியல் தீர்வு குறித்து அரசால் பலமாகப் பேசப்பட்டது.

இந்நிலையில்தான், மீண்டும் அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழு பக்கம் தனது கவனத்தைத் திருப்பியுள்ளது. ஆனால், இவ்வருட கோடைகாலம் சிறிலங்கா இராணுவத்திற்கு ஒரு பெரும் சோதனை காலமாக அமைந்துள்ளமையால் இவ் அரசியல் காய் நகர்த்தல்கள் மூலம் ஒரு கால இடைவெளியை இராணுவத்திற்குப் பெற்றுக் கொடுக்கவும், அதன்மூலம் ஒருபாரியயுத்ததயாரிப்பு நடவடிக்கையில் ஈடுபடவும் அரசாங்கம் முற்பட்டுள்ளது எனலாம்.

ஆனால், அதற்காக அரசாங்கம் ஏனைய கட்சிகளிடம், தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கோரியுள்ளமை வேடிக்கைத்தனமானது. ஏனெனில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் முக்கிய பங்காளி ஐக்கிய தேசியக்கட்சியே ஆகும். அதாவது பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலுள்ள 43 அங்கத்தவர்களில் 23 பேர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர்கள் ஆகும். ஆனால், பாராளுமன்றத் தெரிவுக்குழு தீர்வுத்திட்டம் நோக்கி நகர்வதற்கு இக்கட்சியின் உறுப்பினர்கள் இதுவரை ஒத்துழைப்பு வழங்கியதாகத் தெரியவில்லை.

இதேவேளை, ஜனாதிபதி பிரேமதாசாவை தலைவராகக் கொண்டு இயங்கும் ஐ. தே. கட்சியின் மத்திய குழுவும் இனப்பிரச்சினை குறித்து தீர்வுத்திட்டம் எதையும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடமோ அன்றி அதில் கலந்து கொள்ளும் தமது கட்சி உறுப்பினர்களிடமோ முன்வைக்கவில்லை.

இதேவேளை, பிரதான சிங்கள எதிர்க்கட்சிகளை உள்ளடக்கிய பதின்மூன்று அரசியல் கட்சிகளும் அரசாங்கம் தீர்வுத்திட்டத்தை வைக்க வேண்டும் என வற்புறுத்தியும் வருகின்றன அதற்கும் அரசாங்கம் செவிசாய்ப்பதாக இல்லை. அது பற்றிக் கவலைப்படுவதாகவும் இல்லை.

இந்நிலையில், பாராளுமன்றத் தெரிவுக்குழு விரைவில் தீர்வுத்திட்டத்தை முன்வைக்குமாறும், அதற்கு அரசியல் கட்சிகளை ஒத்துழைக்குமாறு கோருவதும் அரசின்பெரும் ஏமாற்றாகும். அரசியல் முயற்சியில் அரசாங்கம் அக்கறையுடன் செயற்படுகின்றது என்று உலகிற்கு வெளிக்காட்டவும், போர்நடவடிக்கைக்கும் சாதகமற்ற மாரிகாலத்தை இராணுவத் தயாரிப்பிற்கான காலமாகவும், இராணுவம் அடைந்துள்ள மனத்தளர்ச்சியைப் போக்குவதற்கானகாலமாகவும்பயன்படுத்துவதும் அரசாங்கத்தின் திட்டமாகும். ஆகையினால், அரசாங்கம் தற்பொழுது அரசியல் தீர்வுத்திட்டம் பற்றிப்பேசுவதென்பது ஒருபருவகால நடவடிக்கை போன்றதே.

---

தாய் அன்னம்மா வேதநாயகம், இலங்கை சட்டத்தரணிகள் சங்க சட்ட உதவி நிலைய சட்டத்தரணி சாமித் தம்பி தில்லையா ஊடாகத் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனு வழக்கிலேயே நீதியரசர்கள் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தனர்.

இந்த மனுவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க, முல்லைத்தீவு இராணுவ முகாம் கமாண்டர், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வெலிக்கடை சிறைச்சாலை அத்தியட்சகர், சட்டமா அதிபர்ஆகியோர் பிரதிவாதிகளாவர்.

மனுதார் தமது மனுவில் கூறியிருப்பதாவது; எனது மகள் முல்லைத்தீவு கன்னியாஸ்திரி பாடசாலையைச் சேர்ந்த தொண்டர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. அங்கு விசாரித்ததில் வெலிக்கடைக்கு அனுப்பப்பட்டிருப்பது தெரிய வந்தது. வெலிக்கடை போனபோது பார்க்க அனுமதி கிடைக்கவில்லை. கைதிற்கு காரணம் கூறப்படவில்லை மனக்குழப்பத்திற்கு ஆளாகி இருக்கிறார். அவருக்கு வைத்திய உதவி தேவை.

கைதும், தடுப்பும் சட்ட விரோதம். விடுதலை செய்ய வேண்டும். செலவு தொகை தரவேண்டும்.

மனுவை விசாரணைக்கு ஏற்ற நீதியரசர்கள் பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டு பதில் தாக்கல் செய்ய இம்மாதம் 23ஆம் திகதி வரை அவகாசம் வழங்கினர்.

---

கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ் வெளியீட்டு விழாவில் நிதர்சனம் பொறுப்பாளர் திரு. இ பரதன் வெளியீட்டு உரையையும் மாகாண பிரதி மாவட்ட ஆணையாளர் திரு து. வைத்திலிங்கம் அறிமுக உரையையும், தலைமையுரையை திரு.க சொக்கலிங்கமும், ஆய்வுரைகளை திரு. செம்பியன் செல்வனும், அ. சாந்தன் அவர்களும், நூலாசிரியர் உரையை திரு இயல்வாணன் அவர்களும் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து ''எம் வழிச் சுவடுகள்'' எனும் கலை நிகழ்வை முது கவிஞர்.ந வீரமணி ஐயர், இளம் கவிஞர் திருமதி. ஆதிலட்சுமி சிவகுமார், வளர் கவிஞர் க. வேல்றஞ்சன் அவர்களும் சேர்ந்து நடத்த உள்ளனர்.

---

வீதமா கவீழ்ச்சியடையும்என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

திட்டத்தின் கீழ் 20 ஆயிரம் ஏக்கரே மரம் நடுகைக்கு உட்படுத்தப்படுகின்றன.

## கால்நடைகளினால் நெற்பயிர் பாதிப்பு

[மானிப்பாய்]

ஒலி பெருக்கி மூலம் பல தடவைகள் அறிவித்து இருந்தும் நவாலிப் பகுதியில் கால்நடைகளின் அட்டகாசத்தினால் காலபோக நெற்பயிர்ச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

நவாலி கள வோடை பகுதியில் ஆடு, மாடு, கோழிகளின் தொல்லை பெருமளவில் அதிகரித்துள்ளது.

இதேவேளை நேற்று நவாலிப் பகுதியில் பயிர்களைச் சேதம் விளைவித்த மூன்று ஆடுகள் விவசாயிகளால் பிடிக்கப்பட்டு சம்பந்தப் பட்டோரால் தண்டப்பணமும் அறவிடப்பட்டது.

மாடு, ஆடு, கோழி என்பனவற்றுக்கு முறையே தால150, 100, 50 ரூபா தண்டப்பணம் அறவிடப்படும் எனநவாலிஉற்பத்திக்குழுவினரால்அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை ஒருதடவை பிடிபட்ட கால்நடை மறுதடவையும் விவசாயிகளால் பிடிக்கப்பட்டால் அவற்றிற்கு உற்பத்திக்குழு தகுந்த நடவ்டிக்கை எடுக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. [7]

---

# 40 நவீன ஜெட் போர் விமானங்கள் சீனா பாகிஸ்தானுக்கு விற்பனை

[இஸ்லாமாபாத்]

அடுத்த வருட இறுதியில் சீனா பாகிஸ்தானுக்கு எப்-7பி ஜெட் போர் விமானங்கள் நாற்பதை வழங்கும் என்று பாகிஸ்தானின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஓர் ஆசனத்தைக் கொண்ட இந்த போர் விமானங்கள் கடந்த ஜூன் மாதம் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்கீழ் கட்டம் கட்டமாக 1993 ஆம் ஆண்டு இறுதிக்குள் அனுப்பப்பட்டுவிடும் என பாதுகாப்பு உற்பத்தி அமைச்சின் செயலாளர் எம். ஐ. மாலிக் ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இப்புதிய போர் விமானங்கள் ஒலியைவிட இருமடங்கு வேகமாகச் செல்லக் கூடியதாகும். பாகிஸ்தானிடம் அமெரிக்கா விநியோகித்த எப்-16 எஸ் போர் விமானங்கள் உட்பட 50 போர் விமானங்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தானில் அணு ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்ற சந்தேகத்தின் பேரில் அமெரிக்கா தனது பொருளாதார இராணுவ உதவிகளை நிறுத்தியுள்ளமை தெரிந்ததே.

விமானப்படை அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று விரைவில் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து எப்-7 பி எல் போர் விமானங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தும் என்று 'முஸ்லிம்' என்ற செய்திப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## இராணுவ உதவி தொடரும்

(வாஷிங்டன்)

இஸ்ரேலின் யூத அரசாங்கத்திற்கு வழமை போன்று வருடாந்தம் 1.8பில்லியன் டொலர் இராணுவ உதவியை அமெரிக்கா தொடர்ந்துவழங்குமென அமெரிக்க தற்காலிக ராஜாங்க அமைச்சர் லோவ்ரன்ஸ் ஈகல்பேர்க் இஸ்ரேல் பிரதமர் இட்ஷெக் ரபினுக்கு அறிவித்துள்ளார்.

## ஆதிமனிதன் ஸ்பெயினில் தோன்றினான்?

(லண்டன்)

ஸ்பெயினில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதிமனிதனின் எலும்புகள் மனித உற்பத்தி ஆபிரிக்காவிலேயே தோன்றியது என்ற நம்பிக்கைக்குச் சவால் விடுவதாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2,50,000 வருடங்களுக்கு முற்பட்ட இந்த எலும்புகள் மனிதர்களின் மூளையின் அளவு பெரிதாக இருந்ததென்பதையும், உடல் கட்டு நன்கு அபிவிருத்தி அடைந்திருந்தது என்பதையும், இவர்கள் ஐரோப்பாவில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதையும் காட்டுபவையாக உள்ளன என்று ஒப்ஸேர்வர் பத்திரிகை கூறியுள்ளது.

இந்தக் கண்டு பிடிப்பு எமது அறிவில் புரட்சியை ஏற்படுத்தும் என லண்டன் இயற்கை வள சரித்திர நூதனசாலை நிபுணர் கிறிஸ்ட்றிஞ்சர் கூறினார்.

வட ஸ்பெயினில் அலபு யெர்காவிலுள்ள குகையில் 35 ஆதிகால மனிதர்களின் எலும்புகள் கண்டு பிடிக்கப்பட்டன. இதில் இரு மண்டை ஓடுகள் நல்ல முறையில் இருந்தன.

---

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

## 90 நிமிட விவாதத்தில் பில்கிளின்டன் முன்னணியில்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் புஷ், கிளின்டன், பெரோ ஆகிய மூவரும் தங்கள் முதலாவது 90நிமிட விவாதத்தில் கலந்து கொண்டனர்.

இவ்விவாதத்தில் கிளின்டன் பலத்துடன் காணப்பட்டதாகவும் புஷ் தனது நோக்கவுட்டில் வெற்றி பெறவில்லைஎன்றும்கருதப்பட்டது

வரிவிதிப்பு, சுகாதாரச் செலவுகள் வெளிநாட்டுக் கொள்கை தனிப்பட்ட நடத்தைகள் ஆகியன இருதரப்பினரதும் வாதங்களாக இருந்தன. இம்மூவரின் விவாதங்களையும் குறைந்தது ஏழு கோடி மக்கள் டெலிவிஷனில் பார்வையிட்டனர்.

நம்பிக்கையுடன் காணப்பட்ட கிளின்டன் புஷ்ஷை நோக்கி ஜனாதிபதி அவர்களே நீங்கள் உங்கள் சொந்த வழியில் செயல்பட்டீர்கள் உங்களுக்கு சுதந்திரம் இருந்தது ஆனால் பலன் எதுவும் கிட்டவில்லை இப்போது மாற்றத்துக்கான காலம் வந்துவிட்டது எனக் கூறினார்.

ஏ பி ஸி நடத்திய கருத்துக் கணிப்பில் கிளின்டன் முதல் விவாதத்தில் வெற்றிபெற்றிருப்பதாக கூறப்படுகிறது.

## கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு

சீன கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு திங்கட்கிழமை நடைபெற்றது

சோவியத் முகாம்களின் வீழ்ச்சியின் பின்னர் முதல் தடவையாக கூடிய சீன கம்யூனிஸ்ட் கட்சி பொருளாதாரத் துறையில் சீனாவைக் கட்டியெழுப்பவும் அரசியல் ஸ்திரப்பாட்டை ஏற்படுத்தவும் கம்யூனிஸ்ட் கட்சி உறுதி பூண்டுள்ளது.

---

# ஜெயலலிதா ஆட்சிகவிழ்ந்தால் காங்கிரஸ் பொறுப்பல்ல

## - அமைச்சர் அருணாசலம்

முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சி கவிழ்ந்தால் அதற்கு தமிழக காங்கிரஸார் பொறுப்பு அல்ல என இந்திய மத்திய அமைச்சர் அருணாசலம் மதுரையில் பத்திரிகையாளருடன் கலந்துரையாடும் போது தெரிவித்தார்.

ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் நாங்கள் தமிழ் நாட்டை ஐந்து ஆண்டுகள் ஆளுவதற்காக அ. தி. மு. க. வை மக்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். அவர்கள் ஐந்து ஆண்டுகள் நிச்சயமாகவே இருக்க வேண்டும். ஆனால் முன்பு வி. பி. சிங்கை ஐந்து ஆண்டுகள் ஆளுவதற்காகத் தான் தேர்ந்தெடுத்தார்கள் ஆனால் இடையிலேயே கவிழ்த்துவிட்டனர் அதுபோல் அ. தி. மு. கவுக்கு நேர்ந்தால் நாங்கள்பொறுப்பல்ல எனவும் தெரிவித்தார்.

மேலும் அ. தி. மு. கவை இந்திரா காங்கிரசார் எவரும் எதிர்த்தாக இல்லை இந்திரா காங்கிரஸ் தோழமை கட்சியாக இருந்தாலும் நாம் சட்டசபையில் எதிர்கட்சிதான் நாம் எதிர்க்கட்சிப் பணியை மேற்கொள்வோம். தோழமை கட்சி என்பதால் அவர்கள் செயவதற்கெல்லாம் 'ஜால்ரா' அடிக்க முடியுமா எனத் தெரிவித்தார்.

ஈழநாதம்

# திருட்டில் ஈடுபட்ட 16 இளைஞர் காவல்துறையிடம் ஒப்படைப்பு

சரித்திரப் பிரசித்திபெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய திருவிழாக்காலங்களில் ஆலயப் பகுதியில் திருட்டு முயற்சிகளில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 16 இளைஞர்களும் பருத்தித்துறை பிரதேச செயலரினால் தமிழீழகாவல் துறையினரிடம் ஒப்படைக்கப் பட்டனர். இச் சந்தேக நபர்களை தமிழீழ காவல்துறையினர் விசாரணை செய்து வருகின்றனர்.

வல்லிபுர ஆழ்வார் ஆலய திருவிழாவையொட்டி இங்கு வருகைதரும் பக்தர்களின் பல் வேறு வகையான நடவடிக்கைகளுக்கென ஆலயத்தில் பருத்தித்துறை பிரதேச செயலரின் தற்காலிக அலுவலகமொன்று இயங்கிவந்தது இங்கு வருகை தந்த பக்தர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளை தமிழீழ காவல்துறை, சென் ஜோன்ஸ் அம்பலன்ஸ் முதலுதவிப்படை, செஞ்சிலுவைச்சங்க பருத்தித்துறைக் கிளை, ஹாட்லிக் கல்லூரி, வேலாயுதம் மகா வித்தியாலயங்களின் சாரணர் பிரிவினர் ஆகியோர் பிரதேச செயலர் அலுவலகத்துடன் இணைந்து திறமையாக மேற்கொண்டனர் இவ் ஆலய திருவிழாக் காலங்களில் நான்கு பெண்களிடமிருந்து தங்க நகைகள் திருடப்பட்டிருந்ததாகப் பிரதேச செயலர் அலுவலகத்தில் புகார் செய்யப்பட்டிருந்தது (25)

## சென்னை அகதிமுகாமில் இளைஞன் கைது

(சென்னை)

சென்னை அகதிமுகாமில் தங்கியிருந்த இலங்கைத்தமிழ் இளைஞர் ஒருவர் சென்னைப் பொலிசாரால் கைதுசெய்யப் பட்டுள்ளார் என அறிவிக்கப் பட்டுள்ளது.

அண்ணாநகர்மேற்கில்இடம் பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக இவர் கைதுசெய்யப்பட்டதாகவும், லிண்டன் என்ற பெயரில் இவர் நடமாடினார் என்றும், இவரிடமிருந்து பதினைந்து பவுண் நிறையுடைய தங்கச்சங்கிலிகள் மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கணித, விஞ்ஞான

## பயிலுனர் ஆசிரியர்கள் 14 பேர் நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் பதினான்கு கணித, விஞ்ஞான பயிலுனர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

அண்மையில் மேற்படி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் அதிகளவு புள்ளிகளைப் பெற்ற இப்பதின்நான்கு பேருக்கும் மிகவிரைவில் நியமனம் வழங்கப்பட உள்ளது. இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை ஏற்கனவே நிறைவடைந்துள்ளது. (க)

டிப்ளோமா கற்கைநெறி

## பயிலும் ஆசிரியருக்கு வார இறுதிநாள் லீவு

(நல்லூர்)

கொழும்பு பல்கலைக்கழக கல்விபீடத்தின்மூலம் நடாத்தப்படும் பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா பாடநெறி ... அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு பி.என் ஜினசேன கல்வி உயர்கல்வி அமைச்சின் சுற்றுநிருபம் 1992/15ன் மூலம் சகல கோட்டக்கல்வி

## இணைப்பதிகாரி நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு புதிதாக சுகாதார சேவைகள் இணைப்பதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு க பொன்னம்பலம் சுகாதார அத்தியட்சகரிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இணைப்பதிகாரியாக டாக்டர் ம. சந்திரசேகரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கிளிநொச்சி மாவட்டத்தில் சுகாதார சேவைகளைத் துரிதப்படுத்துதல் அவற்றை நிறைவேற்றுதல், மேற்பார்வை செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (16)

## அகதி முகாம்களில் வயிற்றோட்டம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பிரதேசத்திலுள்ள அகதி முகாம்களில் உள்ள மக்களில் 75 வீதமானோர் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார திணைக்கள வட்டாரங்கள் மூலமாக தெரிய வருகிறது.

தற்போது பெய்துவரும் பெருமழை காரணமாக தொற்று நோய்களும் குறிப்பாக குடல் நோய்கள் அதிகரிக்கலாம் என்றும் குடிதண்ணீரை கொதிக்க வைத்து பருகுமாறு சுகாதாரபகுதியினர் தெரிவித்துள்ளனர். (42)

## வேலணைக் கோட்டம் பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

## தேடுதலில் எல். எம். ஜி. மீட்பு

[வவுனியா]

வவுனியா கோட்டத்தில் உள்ள கனகராயன் பெரிய குளம் காட்டுப்பகுதியில் கடந்த 12 ஆம் திகதி விடுதலைப் புலிகள் தேடுதல் நடத்திய போது சிறிலங்கா இராணுவத்தினரின் இயந்திரத் துப்பாக்கி ஒன்றைக் கைப்பற்றினர்.

இத் தேடுதலின் போது ஏ. கே எல். எம். ஜி. - 01, இதன் ரம் மகசீன் - 01 ஆகியவையே விடுதலைப் புலிகளால் கைப் பற்றப்பட்டவையாகும்.

சிங்கள

ஒன்றை சிறிலங்கா அரசு நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளது

அரசின் திட்டப்படி மேற்படி பகுதிகளில் நிலவும் போர் சூழலைக் காரணம் காட்டி இப்பகுதிகளுக்கென ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் ஏழு கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட நிதி இவ்வாறு ஏனைய சிங்களப் பிரதேசங்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு மேற்படி பகுதி பாராளுமன்ற உறுப்பினர்களது ஒப்புதல்களைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் அரசு தற்பொழுது ஈடுபட்டுவருவதாகக் கூறப்படுகிறது

இவ்விடயம் குறித்து மேற்படி பகுதிகளில் உள்ள மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு சுற்றுநிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது

வழமையான சட்ட விதிகளின்படி ஒரு தேர்தல் தொகுதிக்கு ஒதுக்கப்படும் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி அதே தொகுதியில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அண்மையில் இச் சட்டவிதிகளில் ஏற்படுத்தப் பட்ட மாற்றங்களின்படி இந்த ஒதுக்கீட்டின் இருபத்தைந்து சதவீதமான நிதியை மட்டுமே சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் விரும்பும் பட்சத்தில் ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த முடியும்.

ஆனால் தற்போது வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டநிதி முழுவதையும் ஏனைய பகுதிகளின் அபிவிருத்திக்குப்பயன்படுத்துவதற்கு சிறிலங்கா அரசு முயலுகிறது.

எனினும் வடக்கு கிழக்குப் பகுதிகளின் பாராளுமன் உறுப்பினர்கள் இம்முயற்சிக்கு ஒப்புதல் அளித்துவிட்டார்களா என்பது குறித்த தகவல்களை நேற்றுவரை பெற்றுக்

# விளக்க மறியல் கைதிகள் பராமரிப்பிற்கு பெரும்செலவீடு

(கொழும்பு)

சிறிலங்காவில் உள்ள சிறைச்சாலைகளில் பெருந்தொகையானோர் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர் இச் சந்தேக நபர்களைப் பராமரிப்பதற்காக மாதந்தோறும் கோடிக்கணக்கான ரூபாய்களை வீணே செலவிட்டு வர வேண்டிய நிலையில் அரசு உள்ளது என அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை பூராவும் உள்ள சிறைச்சாலைகளில்சிறைவைக்கப்பட்டிருக்கும் 15,000 பேரைப் பராமரிப்பதற்காக தினந்தோறும் 5 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டு வருகின்றது அதேசமயம் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய சகல தர உத்தியோகத்தினரும் சம்பளம் உள்ளிட்ட தொகையையும் கணக்கில்சேர்ப்பின்நாளொன்றிற்கான செலவினம் இருமடங்கிலும் கூடுதலாக அதிகரிக்கும்

விளக்க மறியலில் உள்ளோரை விடுவிக்கும் நடைமுறைகள் சரிவரப் பின்பற்றப்பட்டால் இவர்களைப் பராமரிப்பதற்காக விரயமாகும் பெருந்தொகைப் பணத்தை மீதப் படுத்தலாம், வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தலாம் என நீதியமைச்சர் நிரோன் பர்னாந்து 'திவயின' இதழுக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு பெருந்தொகையானோர் அநாவசியமாகத் தடுத்து வைத்தலை நீதிபதிகள் தவிர்த்தால் சிறைச்சாலைகளினுள் கைதிகளிடையே ஏற்படும் பிணக்குகள் குறையும் அல்லாவிடில் அவர்களிடையே பிரச்சினைகள் ஏற்படுவதுடன் தப்பிச் செல்லவும் முயற்சிப்பர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வேரவில் வைத்தியசாலை மீண்டும் இயங்குகின்றது

(கிளிநொச்சி)

கண்டாவளை, வேரவில் பகுதிகளில் பல வருடங்களாக மூடப்பட்டிருந்த வைத்தியசாலைகள் தற்போது மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன.

பதிவு அதிகாரிகள் பற்றாக் குறையால் மூடப்பட்டிருந்த மேற்படி பகுதி வைத்தியசாலைகளில் புதியவர்கள் நியமிக்கப் பட்டதைத் தொடர்ந்து தற்போது வழமைபோல் சிகிச்சைகள் நடைபெறுகின்றன.

மேற்படி வைத்தியசாலைகள் மீண்டும் செயற்படத் தொடங்கியதையடுத்து பெருமளவு நோயாளர் நாளாந்தம் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதேவேளை வேரவில்வைத்தியசாலையில் பெண் சிற்றூழியர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் நோயாளர் சிகிச்சை பெறுவதில் பல சிரமங்களையும் எதிர்நோக்கவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (16)

## பெற்றுக் கொள்ளவும்

(நமது நிருபர்)

அரசடிறோட்டில் வசிக்கும் க. சிவபாதம் என்பவரால் வலிகாமம் சந்தைவரி ரசீது புத்தகம் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்.

# பயிலுனர் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கப் பணிப்பு

(நல்லூர்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி கல்விச் சேவை ஆணைக்குழுவினால் பயிலுனர் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்பட்டு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளரின் கோரிக்கைக்கிணங்க தமது கடமையேற்றல் கடிதங்களை அனுப்பியவர்களுக்கு, அவர்களுக்கு பயிலுனர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட நாள் தொடக்கம் ரூபா 1300/- (ஆயிரத்து முந்நூறு) வழங்குமாறு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. ஆர் சுந்தரலிங்கம் கடிதம் மூலம் பணித்துள்ளார்.

ஆனால் 1-1-92 தொடக்கம் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு முன்னர் சேவையிலுள்ள பயிலுனர் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் அதிகரித்தபடியான ரூபா100/ (நூறு) இவர்களுக்கு வழங்கப் படவேண்டுமா என்பது தெளிவுறுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்

குக் கடத்திச் செல்லப்படவிருந்ததாகவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸ் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

சநதேக நபர்களுக்கு பொருள்

## எம்பிலிப்பிட்டிய அதிபர்மீது ஆயிரக்கணக்கில் புகார்

(கொழும்பு)

எம்பிலிப் பிட்டிய மகாவித்தியாலயத்தைச்சேர்ந்த 31மாணவர்கள்காணாமல்போனதுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் மேற்படி பாடசாலை அதிபருக்கு எதிராக ஆயிரக்கணக்கான முறைப் பாடுகள் கல்விப் பணிமனைக்குக் கிடைத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி அதிபரைப் பதவி நீக்கம்செய்யும்படி கோரிக்கைகள் கல்வியமைச்சருக்கும், பிராந்தியக் கல்விப்பணிப்பாளருக்கும் பெற்றோர்களினால் விடுக்கப்பட்டுள்ளன.

## 164 மில்லியன் டாலர் உதவி

(கொழும்பு)

சிறிலங்காவின் பொருளாதார சீர்திருத்தங்களுக்காக சர்வதேச நாணய நிதியம் 164 மில்லியன் டாலர் கடனாக வழங்க முடிவு செய்துள்ளது

கடந்த ஆண்டில் செய்யப்பட்ட ஒப்பநதத்தின்படி இலங்கை மூன்று ஆண்டுகளில் 500 மில்லியன் டாலர்களைக்

கொள்ளுப்பிட்டியில்

## பயிலுனர் ஆசிரியர்கள்
## 14 பேர் நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் பதின் நான்கு கணித, விஞ்ஞான பயிலுனர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

அண்மையில் மேற்படி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் அதிகளவு புள்ளிகளைப் பெற்ற இப்பதின் நான்கு பேருக்கும் மிகவிரைவில் நியமனம் வழங்கப்பட உள்ளது. இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை ஏற்கனவே நிறைவடைந்துள்ளது. (க)

டிப்ளோமா கற்கைநெறி

## பயிலும் ஆசிரியருக்கு வார இறுதிநாள் லீவு

(நல்லூர்)

கொழும்பு பல்கலைக்கழக கல்விபபீடத்தின்மூலம் நடாத்தப்படும் பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமா பாடநெறியைப்பின்பற்றும் ஆசிரியர்களுக்கு வாரஇறுதிநாளான வெள்ளிக்கிழமை படிப்பு லீவு அனுமதிக்குமாறு கல்வி உயர்கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு பி.என் ஜினசேன கல்வி உயர்கல்வி அமைச்சின் சுற்றுநிருபம் 1992/15ன் மூலம் சகல கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும், மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் தெரிவித்துள்ளார்.

பயிர்காப்புறுதிச் சபையினால்

## அங்கத்துவம் இழந்த விவசாயிகளுக்கு சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

குறிப்பிட்ட காலத்துக்குள் தாம் செலுத்த வேண்டிய கட்டுப் பணத்தை செலுத்தத் தவறியதன் காரணமாக தமது அங்கத்துவத்தை இழந்து விட்ட விவசாயிகள் தமது அங்கத்துவத்தை புதுப்பித்துக் கொள்வதற்கு பயிர் காப்புறுதி சபையினர் சலுகைகளை வழங்கியுள்ளனர்.

இவ்வாறு கட்டுப்பணத்தை உரிய தவணைகளில் கட்டத் தவறியமைக்காக உறுப்புரிமையை இழந்து விட்ட விவசாயிகள் தாம் வேண்டிய பாக்கிப் பணத்தை முழுமையாக செலுத்துவதன் மூலம் தொடர்ந்தும் விவசாய ஒய்வூதிய திட்டத்தில் அங்கம் வகிக்க பயிர்காப்புறுதிச்சபை அனுமதி வழங்கியுள்ளது

வடக்கு-கிழக்கு பகுதிகளில் நிலவும் யுத்த நிலையை கருத்தில் கொண்டு விவசாயிகளுக்கு இந்த விசேட சலுகை வழங்கப்பட்டுள்ளதாக விவசாய ஒய்வூதிய திட்ட பயிர் காப்புறுதி சபை அறிவித்துள்ளது. (42)

### பேறுபேறுகள் விரைவில் வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் மிக விரைவில் வெளிவர உள்ளன.

இப் போட்டிப் பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளது.

பெறுபேறுகளை நிரற்படுத்தும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகிறது பெறுபேறுகள் நிரற்படுத்தப்பட்டதும் பெறுபேறுகளின் பட்டியல் வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும் அதன் பின்னர் இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு பெறுபேறுகள் அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

பளைப்

இந்நிகழ்ச்சியில் யாழ்.மாவட்ட விசேட தளபதி திரு. தமிழ்ச்செல்வன் உட்பட இயக்கத்தின் பல முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இப்பணிமனையில் மிருசுவில் பிரதேசத்தில்இருந்து எழுதுமட்டுவாள், முகமாலை, புலோப்பளை, பளை, புதுக்காட்டுச்சந்தி, இயக்கச்சி ஆகிய பிரதேசங்கள் வரை உள்ள மக்கள் தங்கள் புகார்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பிரதேசத்திலுள்ள அகதி முகாம்களில் உள்ள மக்களில் 75 வீதமானோர் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார திணைக்கள வட்டாரங்கள் மூலமாக தெரிய வருகிறது.

தற்போது பெய்து வரும் பெருமழை காரணமாக தொற்று நோய்களும் குறிப்பாக குடல் நோய்கள் அதிகரிக்கலாம் என்றும் குடிதண்ணீரை கொதிக்க வைத்து பருகுமாறு சுகாதாரபகுதியினர் தெரிவித்துள்ளனர். (42)

## வேலணைக் கோட்டம் பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தங்கியுள்ள தீவக மாணவர்களுக்கான கல்விச் சேவை இன்று (15ஆம் திகதி) தொடக்கம் வேலணை கல்விக் கோட்டத்தினால் பொறுப்பேற்கப்படுகின்றது இதுவரை காலமும் சாவகச்சேரி கல்விக் கோட்டத்தினாலேயே மேற்படி மாணவர்களுக்கு கல்விச் சேவை நடாத்தப்பட்டுவந்தது இன்று முதல் வேலணைக் கல்விக் கோட்டத்தினால் தெரிவு செய்யப்பட்ட இருபத்தைந்து ஆசிரியர்களினால் கல்வி கற்பிக்கப்படும். பிரஸ்தாப குடியிருப்பில் இயங்கும் மெலிஞ்சிமுனை றோமன் கத்தோலிக்க வித்தியாலயமே தீவக மாணவரின் பாடசாலை என்பதும் அதில் சுமார் ஆயிரத்திஐம்பது மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (22)

### டிசம்பர் 7 இல் க. பொ. த [சா/த] பரீட்சை

(கொழும்பு)

க பொ. த. சாதாரணதர பரீட்சை டிசம்பர் 7 ஆம் திகதி ஆரம்பமாகும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை 17 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும், ஐந்து இலட்சம் பரீட்சார்த்திகள் இம்முறை பரீட்சைக்கு தோற்றுகிறார்கள் என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

எறிகணை

தல்களை நடாத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை நடத்தப்பட்ட இத்தாக்குதலின் போது பல எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதனால் இப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர். (க)

வேண்டும். அண்மையில் இச் சட்டவிதிகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களின்படி இந்த ஒதுக்கீட்டின் இருபத்தைந்து சதவீதமான நிதியை மட்டுமே சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் விரும்பும் பட்சத்தில் ஏனைய பிரதேசங்களின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த முடியும்.

ஆனால் தற்போது வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டநிதி முழுவதையும்ஏனைய பகுதிகளின் அபிவிருத்திக்குப்பயன்படுத்துவதற்கு சிறிலங்கா அரசு முயலுகிறது.

எனினும் வடக்கு கிழக்குப் பகுதிகளின் பாராளுமன் உறுப்பினர்கள் இம்முயற்சிக்கு ஒப்புதல் அளித்துவிட்டார்களா என்பது குறித்த தகவல்களை நேற்றுவரை பெற்றுக் கொள்ள முடியவில்லை. (க)

நால்வர்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மேற்படி நான்கு பேரையும் விடுதலை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது மிக விரைவில் இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

இராணுவத்தின்

லிங்கம் [வயது 55], சுந்தரலிங்கம் சந்திராதேவி [வயது 55], சுந்தரலிங்கம் திருவதனி [வயது 17], சுந்தரலிங்கம் ஜெயகௌரி [வயது15], சுந்தரலிங்கம் இரத்தினேஸ்வரி [வயது 12] முருங்கைப்புலம் அளவெட்டி மேற்கைச் சேர்ந்த பொன்னுத்துரை இராசலிங்கம் [வயது 56], இ. இராசலட்சுமி [வயது 65], ஐயாத்துரை பாலசிங்கம் [வயது 61], முத்துக்குமாரு இராசங்கிகம் [வயது 68], தேவராசா இராசமலர் [வயது 50], சுப்பிரமணியம் தங்கமுத்து [வயது 60], சுப்பிரமணியம் விமலேஸ்வரி [வயது 21], விநாயகமூர்த்தி பராசக்தி [வயது 40], விநாயகமூர்த்தி சுரேஸ்குமார் [வயது 14], பாஸ்கரன் சரஸ்வதி [வயது 30], பா. தனுஷன் [வயது 2], வைரவநாதர் கனகாம்பிகை [வயது 57], குணசிங்கம் நாகரத்தினம் [வயது 40], குணசிங்கம் சிவரஞ்சினி [வயது 13 - அளவெட்டி அருணோதயக் கல்லூரி], யோகலிங்கம் நாகம்மா [வயது 65 - முருங்கைப்புலம் அளவெட்டி மேற்கு], இதே இடத்தைச் சேர்ந்த இரவிச்சந்திரன் நவரஞ்சினி [வயது 24], இரவிச்சந்திரன் ஜனேசன் (வயது 1), இரத்தினசிங்கம் பாலமணி [வயது 42], நடராஜா மகாலட்சுமி [வயது 60].

சேவை ஆணைக்குழுவினால் பயிலுனர் ஆசிரியர்களாகநியமனம் செய்யப்பட்டு யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளரின் கோரிக்கைக்கிணங்க தமது கடமையேற்றல் கடிதங்களை அனுப்பியவர்களுக்கு, அவர்களுககு பயிலுனர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட நாள் தொடக்கம் ரூபா 1300/- (ஆயிரத்து மூந்நூறு) வழங்குமாறு சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளர்களையும்

யாழ்

குக் கடத்திச் செல்லப்படவிருந்ததாகவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸ் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

சந்தேக நபர்களுக்கு பொருள்களை வழங்குபவர்கள் என்ற சந்தேகத்தின் பேரின் மேலும் இரண்டு வட பகுதி வாசிகளைக் கொழும்பில் பொலிசார் தேடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்ப

கானபயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளது, யாழ். இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் பயிற்சி வகுப்புக்களில் நவாலி, மானிப்பாய், உடுவில், சுன்னாகம், ஏழாலை கொத்தணிகளுக்குட்பட்ட ஆசிரியர்களும், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் நடைபெறும் பயிற்சி வகுப்புக்களில் கோப்பாய்,நீர்வேலி, புத்தூர், அச்சுவேலிஉரும்பராய்,வசாவிளான் கொத்தணிகளுக்கு உட்பட்ட ஆசிரியர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இனப்பிரச்சினை

பில் அமைச்சரவைப் பேச்சாளரும் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ஏ.சீ எஸ் ஹமீது ஆகியோர் ஐ. தே. க. சார்பிலும், அநுரா பண்டாரநாயக்கா சிறிலங்கா சுதந்திரக் கட்சிசார்பிலும்கலந்துகொண்டுள்ளனர். கடந்த புதனன்று பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இச்சந்திப்பு நடைபெற்று உள்ளது.

இச்சந்திப்பு பற்றி அநுரா பண்டாரநாயக்கா கருத்து வெளியிடுகையில்; வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பாக இருக்கக் கூடிய சர்ச்சைகளை வெல்லும் வகையில் இந்த மாற்றுத் திட்டம் முன்னேற்றகரமானது எனவும். தமிழர் விடுதலைக் கூட்டணியுடனான பேச்சுக்கள் வெற்றியளித்துள்ளன எனவும், தமது கட்சி மாற்றுக்கிட்டம் பற்றி ஆழ்ந்து பரிசீலிப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஆனால் 1-1-92 தொடக்கம் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு முன்னர் சேவை படவேண்டுமா என்பது தெளிவுறுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## எம்பிலிப்பிட்டிய அதிபர்மீது ஆயிரக்கணக்கில் புகார்

(கொழும்பு)

எம்பிலிப் பிட்டிய மகாவித்தியாலயத்தைச்சேர்ந்த 31மாணவர்கள்காணாமல்போனதுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் மேற்படி பாடசாலை அதிபருக்கு எதிராக ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் கல்விப் பணிமனைக்குக் கிடைத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி அதிபரைப் பதவி நீக்கம்செய்யும்படி கோரிக்கைகள் கல்வியமைச்சருக்கும், பிராந்தியக் கல்விப்பணிப்பாளருக்கும் பெற்றோர்களினால் விடுக்கப்பட்டுள்ளன.

### கொள்ளுப்பிட்டியில் பட்டப்பகலில் கொள்ளை

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் லிபர்ட்டி பிளாசாவில் உள்ள கடையொன்றுக்குள் புகுந்த மூன்று இளைஞர்கள் காசாளர் பணத்தை எண்ணிக் கொண்டிருந்த போது பத்து இலட்சம் ரூபாவினை பறித்துக்கொண்டு ஓடி விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது

ஒட்டோக்களில் இவர்கள் தப்பியோடியதாக அங்கிருந்தவர்கள் பொலிசாரிடம் தெரிவித்தனர்.

தப்பி

மூதூர் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இவர் பொலிஸ் படையைவிட்டுத் தப்பி குருநாகலில் உள்ள தனது வீட்டுக்குச் செல்லும் போதே பொருள்களுடன் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார் என்று விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

### 164 மில்லியன் டாலர் உதவி

(கொழும்பு)

சிறிலங்காவின் பொருளாதார சீர்திருத்தங்களுக்காக சர்வதேச நாணய நிதியம் 164 மில்லியன் டாலர் கடனாக வழங்க முடிவு செய்துள்ளது

கடந்த ஆண்டில் செய்யப்பட்ட ஒப்பநதத்தின்படி இலங்கை மூன்று ஆண்டுகளில் 500 மில்லியன் டாலர்களைக் கடனாகப்பெறும். இந்தமூன்று ஆண்டுக் காலத்தில் அந்நிய நாட்டு முதலீட்டை ஊக்குவிப்பது உள்ளிட வேறுபல நிபந்தனைகளையும் சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ளது.

### உதவிப்பண கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வலி மேற்குப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து மானிப்பாய் பகுதியில் தங்கியிருக்கும் பொதுசனமாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களது கொடுப்பனவுகள் கடந்த ஒரு வாரமாக சண்டிலிப்பாய், மானிப்பாய்,சுதுமலைப்பகுதியிலுள்ள கிராமசேவையாளர் அலுவலகங்களில் வைத்து வழங்கப்படுகிறது.

மே யூன் மாதங்களுக்குரிய இப்பணம் தற்பொழுது இளவாலை, மாதகல்,வடலியடைப்பு பண்டத்தரிப்பு,சில்லாலை பகுதிகளுக்குரிய கிராமசேவையாளர்களினால் அப்பகுதி மக்களுக்கு வழங்கப்படுகிறது. 42

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 14-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6107

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்

22-6897, 22-4766, 27-9404, 24-7225, 22-3379, 27-4024, 26-6628, 40-0919, 24-4664, 24-5703, 27-0994, 26-2827, 24-6639 24-1685, 27-5845, 37-4619.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்

41-1227, 26-0502, 24 6161, 27-9489, 26-6309, 24-5092, 42-3419, 27-8787, 41-0976, 41-9989, 42-2862. 24-5041, 41-9997, 41-9175, 26-6075, 27-9365, 27-2056, 27-9030, 27-6415, 27-2056.